# இந்தியா மற்றும் வங்காளம் கூட்டு ஆலோசனை ஆணையத்தின் மூன்றாவது கூட்டம்

**செப்டம்பர் 15, 2014**

மூன்றாம் இந்திய மற்றும் வங்காள கூட்டு ஆலோசனை குழு (JCC) கூட்டம் , இந்திய வெளிவிவகார அமைச்சர் மற்றும் வங்காளம் வெளியுறவு அமைச்சர் ஆகியோரின் கூட்டுத் தலைமையில் செப்டம்பர் 20 அன்று புது தில்லியில் நடக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த கூட்டத்திற்காக இந்தியாவிற்கு ஒரு உயர் மட்ட குழுவை திரு. அபுல் ஹசன் மஹ்மூத் அலி, வங்காள மாண்புமிகு வெளியுறவு அமைச்சர் அவர்கள் வழிவகுக்க உள்ளார்.

செப்டம்பர் 2011 ல் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களின் வங்காளத்திற்கான பயணத்தின்போது, அபிவிருத்தி ஒத்துழைப்பிற்கான கட்டமைப்பு உடன்பாடு ஒப்பந்தத்தின் கீழ் இந்த ((JCC) அமைக்கப்பட்டது. இந்த ஆலோசனை குழு கூட்டம் (JCC)யின் முதல் சுற்று மே 2012 ல் புது தில்லியிலும், இரண்டாவது சுற்று பிப்ரவரி 2013ல் டாக்காவிலும் நடைபெற்றது.

பல்வேறு துறைகளில் உறவுகளுக்கான முயற்சிகள், உந்துதல் பகுதிகளை அடையாளம் காணுதல் மற்றும் இருதரப்பு கூட்டு முயற்சியில் மேலும் வளர்ச்சிக்கான திசைகளை வழங்குதல் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து இந்த ஆலோசனை குழு கூட்டம் (JCC) ஆய்வு செய்யும்.

இந்தியாவில் தங்கியிருக்கும் போது, வங்காள வெளியுறவு அமைச்சர் மாண்புமிகு இந்திய ஜனாதிபதி மற்றும் மாண்புமிகு இந்திய பிரதமர் ஆகியோருக்கு அழைப்பு விடுக்க உள்ளார்.

**புது தில்லி**

**செப்டம்பர் 15, 2014**